JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC // 58/2020 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | Chandrasekar |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 16.08.2022.

முதல் விசாரணை

நான் தற்போது சேர்ந்தமரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோழி பண்ணை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2ம் எதிரி குளோரி ஸ்ரீராம் சிட்பண்ட்டில் வேலை செய்யும் போது எனக்கு பழக்கம் ஏற்பட்டது, சேர்ந்தமரத்தில் எனக்கு புது கோழிப்பண்ணை வாங்குவதற்காக பணம் தேவைப்பட்டது. ஸ்ரீராம் பைனான்ஸில் என் மனைவி வேலை செய்வதால் நான் லோன் வாங்கி தருகிறேன் என்று 1ம் எதிரி எனக்கு சொன்னார். லோன் ரெடி பண்ணுகிறேன் என்றும், தனக்கு வீடு கட்ட பணம் வேண்டும் என்றும் 1ம் எதிரி என்னிடம் கடன் கேட்டார். அவருக்கு லோன் வந்தவுடன் திருப்பி தருவதாக சொல்லி 1ம் எதிரி கேட்டார். 1ம் எதிரி ஒரு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் ரொக்கமாக ஆய்க்குடியில் நான் குடியிருக்கும் வீட்டிற்கு நேரில் வந்து வாங்கி சென்றார். அதற்கு அவரது மனைவியான 2ம் எதிரி குளோரி என்பவர் பெயரிலுள்ள காசோலையை ஒரு இலட்சத்து இருபதாயிரத்திற்கு காசோலை கொடுத்தார். காசோலையை நான் வசூலுக்கு அனுப்பிய போது மேற்படி வங்கியில் பணமில்லை என்று திருப்பி வந்தது. அதன் பின்பு நான் 1ம் எதிரியிடம் போன் செய்து பணம் கேட்டேன். 1ம் எதிரி பணம் தரவில்லை.

அதன் பின்பு சேர்ந்தமரம் வந்து சேர்ந்தமரத்தில் குடியிருந்த போது அங்கு வந்த 1ம் எதிரி என் வீட்டிற்கு வந்து என்னை காசோலை திருப்பப்பட்டதை எல்லோரிடம் சொல்லியிருக்கிறாய் என்றும், இப்படி பண்ணிக்கொண்டு இருந்தால் ஊர் விட்டு ஊர் வந்து குடியிருக்கும் என்னையும், என் மகனையும் என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் என்றும், கூலிப்படையை வைத்து அழிக்க முடியும் என்றும், மிரட்டினார் பயந்து போய் இந்த விபரத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை.எனக்குஇரண்டு மகள்கள் இருப்பதால் நான் பயந்து போய் காவல் கண்காணிப்பாளரிடம்புகார் கொடுத்தேன்.அதன் அடிப்படையில் பாவூர்சத்திரம் காவல் நிலையத்திற்கு புகார் வந்தது. அதன் பின்பு என்னை அழைத்து விசாரித்தார்கள்.அதன் பின்பு முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவதுதுதான்,அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான், அந்தபுகார் மனு அசா.ஆ,1 ஆக குறியிடு செய்யப்படுகிறது, நம்பிக்கையின் பேரில் கடன் கொடுத்தேன், வாங்கி கொண்டு பணம் தரவில்லை,கொலை மிரட்டல் விடுத்தால் நான் பணத்தை அவரிடம் கேட்க முடியவில்லை. போலிசாரிடம் நான் Check leaf. Return Memo. Counter file Xerox copy-கள் கொடுத்தேன். அது என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். நான் போலிசாரிடம் Check leaf, Return Memo. Counter file original- யை கொடுக்கும் போது நகல்கள் மட்டும்பெற்றுக்கொண்டு, நீதிமன்றம் கேட்கும் போது கொடுத்தால் போது என்று சொல்லிவிட்டார்கள்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.